குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.281/2022

அ.சா.1

2024–ம் ஆண்டு டிசம்பர் 18–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசன் | ஜாதி | |
| தந்தை பெயர் | ராஜமாணிக்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.55 மணி,

Accused Siva absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mrs.R.Divya present for Advocate Mr.Thirumugam for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் சேலம் இரும்பு உருக்காலை பகுதியில் குடியிருந்து, ஆவின் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் காயமடைந்து இறந்துபோன பிரவீன்குமார் எனது மகன். கடந்த 12.01.2020 ஆம் தேதி இரவு 07.30 மணியளவில் எனது மகன் பிரவீன் குமார் அவரது அக்கா வீட்டிற்கு செல்வதாக கூறி, டி.என்.52 2017 என்ற பதிவெண் உடைய பல்சர் இருசக்கர வாகனத்தில் வேம்படிதளத்திற்கு சென்றார்.

2. சேலம் – தாரமங்கலம் சாலையில் அழகுசமுத்திரம் அம்மன் தியேட்டர் அருகே, மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, அதே சாலையில் அழகுசமுத்திரம் அம்மன் தியேட்டர் அருகே டாரஸ் லாரி எந்தவித இண்டிகேட்டரும் போடாமல் நடு சாலையில் வெள்ளைக் கோட்டருகே நின்று கொண்டிருந்தது. எதிர் திசையில் வாகனம் வந்தபோது, பிரவீன் குமார் இடதுபுறமாக சாலையில் ஒதுங்கியபோது, சாலையில் நின்றிருந்த, டாரஸ் லாரியின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாக சம்பவ

இடத்தில் இருந்த இருசன் என்பவர் இரவு 08.00 மணிக்கு போன் செய்து தகவல் சொன்னார்.

3. நான், 08.10 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, எனது மகன் பிரவீன் குமார் தலையில் காயம் ஏற்பட்டு, கீழே விழுந்துகிடந்தார். அருகில் இருந்தவர்கள் தனியார் ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள். நான், எனது மகனை 09.00 மணிக்குள்ளாக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தேன். அங்கு, மருத்துவர் பரிசோதித்துவிட்டு, வரும் வழியிலேயே எனது மகன் இறந்துவிட்டதாக சொன்னார்.

4. பின்பு, நான் தாரமங்கலம் காவல் நிலையத்தில் இதுசம்மந்தமாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. விபத்து ஏற்படுத்திய டாரஸ் லாரியின் பதிவெண், டி.என்.52 ஏ 0303 ஆகும். மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் யாரென்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.03 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.